ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.



## திருமொழி திருநாள் - திருவாய்மொழி திருநாள் அழைப்பிதழ்

பகல்பத்து - இராப்பத்து 31.12.2024 முதல் 20.01.2025 வரை

# வைகுண்ட ஏகாதசி

**10 - 01 - 2025**

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே வரவரமுநயே நம:

வேதத்தைவேதத்தின் சுவைப்பயனை விழுமியமுனிவர்விழுங்கும்
கோதிலின்கனியை நந்தனார்களிற்றைக் குவலயைத்தோர்தொழுதேத்தும்
ஆதியை அமுதைஎன்னையாளுடையப்பனை ஒப்பவரில்லா
மாதர்கள்வாழும் மாடமாயிலைத் திருவல்லிக்கேணிகண்டேனே.

-திருமங்கையாழ்வார்

எம்பெருமான் உலகத்தில் உள்ள உயிர்களை உய்விக்க வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டு பின்னானார் வணங்கும் சோதி என்று கொண்டாடப்படும் வகையில் பல்வேறு திருக்கோலம் கொண்டு அருளுகிறார். திருவரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம், அயோத்தி, சோளிங்கர் ஆகிய ஐந்து திவ்யதேசத்து எம்பெருமான்கள் இத்தலத்தில் தனித்தனி சன்னதிகளில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். நின்ற கோலத்தில் வீரநிலையில் மீசையுடன் வேங்கடகிருஷ்ணனாகவும், இருந்த திருக்கோலத்தில் யோக நிலையில் யோகநரசிம்மராகவும், கிடந்த திருக்கோலத்தில் போகசயன நிலையில் ஸ்ரீரங்கநாதராகவும் எல்லா நிலையிலும் இத்தலத்தில் சேவை தருவது சிறப்பம்சமாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவல்லிக்கேணியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு பார்த்தசாரதி சுவாமிக்கு நிகழும் சோபகிருது மார்கழி மாதம் 16ம் தேதி முதல் தை மாதம் 7ம் தேதி முடிய (31-12-2024 முதல் 20-01-2025) திருமொழி திருநாள் (பகல்பத்து), திருவாய்மொழி திருநாள் (இராப்பத்து) ஆகிய திருவிழாக்கள் நிகழ்ச்சிநிரலில் உள்ளவாறு வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில் ஆழ்வார்களால் பாடப்பெற்ற தமிழ் பாசுரங்களான நாலாயிர திவ்யபிரபந்தம் பாடப்படுகிறது. இத்தமிழ் திருவிழாவின் சிறப்பம்சமாக வேதம் தமிழ் செய்த நம்மாழ்வாருக்கும். அடியவர்களுக்கும் எம்பெருமான் தானே பரமபதவாசலுக்கு எழுந்தருளி அருள்தரும் வைகுண்ட ஏகாதசி திருநாள் 10.01.2025 அன்று சிறப்பாக நடைபெற உள்ளதால் இறை அன்பர்கள் அனைவரும் இப்பெருவிழாவில் கலந்து கொண்டு அருள்மிகு பார்த்தசாரதி சுவாமியின் திருவருளைப் பெற்று உய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**சி.நித்யா M.A., M.L.,**

துணை ஆணையர் / செயல் அலுவலர் /தக்கார்

ஸ்ரீ

## திருமொழித் திருநாள் - பகல்பத்து

| தேதி | உத்ஸவங்கள் / உபயதாரர்கள் |
|---|---|
| **31-12-2024**<br>மார்கழி 16, செவ்வாய் | 1ம் திருநாள்<br>**ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன் திருக்கோலம்**<br>உபயம் : அப்பா & கோ ட்ரஸ்ட் |
| **1-1-2025**<br>மார்கழி 17, புதன் | 2ம் திருநாள்<br>**ஸ்ரீ வேணுகோபாலன் திருக்கோலம்**<br>உபயம் : ராதிகா சந்தோஷ் |
| **2-1-2025**<br>மார்கழி 18, வியாழன் | 3ம் திருநாள்<br>**ஸ்ரீ காளிங்கநர்த்தன திருக்கோலம்**<br>உபயம் : துளசிங்கம் செட்டி & ஆறுமுகம் செட்டி சாரிடி |
| **3-1-2025**<br>மார்கழி 19, வெள்ளி | 4ம் திருநாள்<br>**ஸ்ரீ சக்கரவர்த்தித்திருமகன் திருக்கோலம்**<br>உபயம் : ஏ.வி.கஸ்தூரிரங்கன் |
| **4-1-2025**<br>மார்கழி 20, சனி | 5ம் திருநாள்<br>**ஸ்ரீ ஏணிக்கண்ணன் திருக்கோலம்**<br>உபயம் : என்.வி.ரங்கராஜன், கூ.உ.சுந்தரமூர்த்தி |
| **5-1-2025**<br>மார்கழி 21, ஞாயிறு | 6ம் திருநாள்<br>**ஸ்ரீ பரமபதநாதன் திருக்கோலம்**<br>உபயம் : முகிலி எம்.இராதாகிருஷ்ண செட்டி |
| **6-1-2025**<br>மார்கழி 22, திங்கள் | 7ம் திருநாள்<br>**ஸ்ரீ பகாசுரவதம் திருக்கோலம்**<br>உபயம் : மாநில கணக்காய அலுவலக அலுவலர்கள் |
| **7-1-2025**<br>மார்கழி 23, செவ்வாய் | 8ம் திருநாள்<br>**ஸ்ரீ ராமர் பட்டாபிஷேக திருக்கோலம்**<br>உபயம் : R.L.N டிரஸ்ட் ஸ்ரீ ஹரி |
| **8-1-2025**<br>மார்கழி 24, புதன் | 9ம் திருநாள்<br>**ஸ்ரீ முரளிக்கண்ணன் திருக்கோலம்**<br>உபயம் : கணேஷ்லால் பஜாஜ் |
| **9-1-2025**<br>மார்கழி 25, வியாழன் | 10ம் திருநாள்<br>**ஸ்ரீ நாச்சியார் திருக்கோலம்**<br>உபயம் : டி.தாயாரம்மாள் எஸ்டேட் |



**1ம் திருநாள்**

**10-1-2025** மார்கழி 26, வெள்ளிக்கிழமை

**உத்ஸவங்கள் / உபயதாரர்கள்**

# வைகுண்ட ஏகாதசி

அதிகாலை 2-30 மணி முதல் நள்ளிரவு 10.30 மணி வரை
மூலவர் தரிசனம் நடைபெறும்

காலை 4-15 மணிக்கு உள்பிரகார புறப்பாடு காலை 4-30 மணிக்கு

# பரமபத வாசல் திறப்பு

**வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபனுக்கு மரியாதை**
காலை 5-30 மணி முதல் இரவு 10-30 மணி வரை
கட்டண தரிசனம் மற்றும் பொது தரிசனம் நடைபெறும்.

இரவு 10-00 மணிக்கு உற்சவர் திருமஞ்சனம்
**இரவு 11-30 மணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி உற்சவர்**
**நம்மாழ்வாருடன் பெரியவீதி புறப்பாடு**

உபயம் - மயிலை குருதேவ் தரும ஸ்தாபனம், மண்டகப்படி - **P.K.**பாஸ்கர்
**நம்மாழ்வார் :** உபயம் - புதுவை
சாவித்திரிஎம்மாள் டிரஸ்ட் - கூ.உ. **P.J.**கோதண்டராமன்

| தேதி | உத்ஸவங்கள் / உபயதாரர்கள் |
|---|---|
| **11-1-2025**<br>மார்கழி 27, சனி | 2ம் திருநாள்<br>**ஸ்ரீ வேணுகோபாலன் திருக்கோலம்**<br>உபயம் : E.R.துரைசாமி ஐயங்கார் & குடும்பத்தினர்<br>நம்மாழ்வார் - உபயம் - தஞ்சை மூர்த்தி |
| **12-1-2025**<br>மார்கழி 28, ஞாயிறு | 3ம் திருநாள் - உபயம் : ரிசர்வ் வங்கி ஊழியர்கள்<br>நம்மாழ்வார் - உபயம் - கலசால மணவாளய்யா |
| **13-1-2025**<br>மார்கழி 29, திங்கள் | 4ம் திருநாள் - உபயம் : R.ஜெகன்நாதன் S/o இராமலிங்கம்<br>நம்மாழ்வார் - உபயம் - கவிரால ஆளவந்தார் செட்டியார் |
| **14-1-2025**<br>தை 1, செவ்வாய் | 5ம் திருநாள்<br>**ஸ்ரீ ரத்னாங்கி ஸேவை**<br>நம்மாழ்வார் - உபயம் - எஸ்.வி.கே.பிரதர்ஸ் |
| **15-1-2025**<br>தை 2, புதன் | 6ம் திருநாள்<br>**ஸ்ரீ திருவேங்கடமுடையான் திருக்கோலம்**<br>உபயம் - எம்.வி.கே.புருஷோத்தம முதலியார்<br>நம்மாழ்வார் - உபயம் - ஜெ.ஸ்ரீனிவாசலு செட்டியார் |
| **16-1-2025**<br>தை 3, வியாழன் | 7ம் திருநாள் உபயம் - எல்.ஆர்.சுவாமி, எல்.ராஜ்மோகன்<br>**உற்சவர் முத்தங்கி சேவை** - உபயம் - தஞ்சை மூர்த்தி<br>**நம்மாழ்வார் - நாச்சியார் திருக்கோலம்**<br>உபயம் - வேதவல்லி தாயாராம்மாள் டிரஸ்ட் |
| **17-1-2025**<br>தை 4, வெள்ளி | 8ம் திருநாள்<br>**ராஜமன்னார் திருக்கோலம்**<br>உபயம் - பி.நிரஞ்சன், பி.மதுசூதனன்<br>நம்மாழ்வார் - உபயம் - திருவேங்கட குப்தா |
| **18-1-2025**<br>தை 5, சனி | 9ம் திருநாள்<br>**கோவர்த்தனகிரி திருக்கோலம்**<br>உபயம் - V.R.பார்த்தசாரதி பட்டாச்சாரியார்<br>பெரியமுறை பிரதான அர்ச்சகர்<br>நம்மாழ்வார் - உபயம் - கே.கோபாலாச்சார் |
| **19-1-2025**<br>தை 6, ஞாயிறு | 10ம் திருநாள்<br>**சாற்றுமுறை - நம்மாழ்வார் திருவடி தொழல்**<br>உபயம் - மந்திரபுஷ்பம் S.பாஷ்யம் ஐயங்கார் பிரதர்ஸ்<br>கூ.உ. யாதவ கமலம்மாள் டிரஸ்ட் |
| **20-1-2025**<br>தை 7, திங்கள் | 11ம் திருநாள் - **இயற்பா சாற்றுமுறை**<br>உபயம் - மந்திரபுஷ்பம் S.பாஷ்யம் ஐயங்கார் பிரதர்ஸ் |



11 - 01 - 2025 மற்றும் 19 - 01 - 2025 ஆகிய இருதினங்கள் காலை
**பரமபதவாசல் சேவை** மற்றும் 7 தினங்கள் மாலை 4.15 மணிக்கு
**பரமபதவாசல் சேவை** நடைபெறும்

---

வைகுண்ட ஏகாதசி அன்று மலர் வைங்கர்யம் மற்றும் வாழை மரம் ஸ்ரீவாரி ஸ்ரீதர், அமைந்தகரை, சென்னை
வைகுண்ட ஏகாதசி அன்று அன்னதானம் – வசுந்தரா கண்ணன்

---

ஆண்டாள் நீராட்டு உற்சவம் 05.01.2025 முதல் 13.01.2025 வரை